09.08.2021
அசல் வழக்கு எண்: 209/2016

வா.சா.1 முருகன் சாட்சி இன்று நீதிமன்றத்தில் ஆஜராகி பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை ஆரம்பித்த நேரம்– 12.05 P.M

ஏற்கனவே 5,.2.2012ம் தேதியில் எனக்கும், பிரதிவாதிக்கும், பிச்சைமுத்துவுக்கும் இடையே ஏற்பட்ட எழுத்து மூல ஒப்பந்தத்தின் அடிப்படையில் நாங்கள் நடப்பதாக ஒத்து கொண்டு தற்போது அதை நான் மீறி செயல்படுகிறேன் என்று சொன்னால் சரியல்ல. அவ்வாறு ஒப்பு கொண்ட சரத்துகளை மீறி நடப்பதற்காகத்தான் இந்த வழக்கு தாக்கல் செய்கிறேன் என்று சொன்னால் சரியல்ல. அந்த ஒப்பந்தத்தின் அடிப்படையில் எங்கள் வீட்டிற்கும், பிரதிவாதி வீட்டிற்கும் நடுவில் இரண்டு பில்லர்கள் எழுப்புவது சம்மந்தமாக இரண்டு நபர்களும் ஒத்து கொண்டோம் என்றால் சரியல்ல. பிரதிவாதி கட்டுமானம் 2013 பிப்ரவரி மாத வாக்கில் கட்டினாரா என்று கேட்டால் 2015 வருடம் அக்டோபர் மாதம் முதல் வாரம் கட்டினார். 2015ம் வருடம் அவ்வாறு பிரதிவாதி அக்டோபர் மாதத்தில் ஆக்கிரமித்து கட்டியதை நிரூபிக்கும் வகையில் காவல் நிலையத்தில் புகார் எதுவும் கொடுத்தேனா என்று கேட்டால் 2.8.2016ம் தேதி காவல் நிலையத்தில் புகார் கொடுத்தேன். சாட்சி தன்னிச்சையாக அதுவரை மத்தியஸ்தர்கள் வைத்து பேசிக்கொண்டு இருந்தோம் என கூறுகிறார். பிரதிவாதி கட்டுமானம் செய்யம் காலத்தில் என் மீது இந்த நீதிமன்றத்தில் வா.சா.ஆ.8 கேவியட் மனு ஒன்று தாக்கல் செய்துள்ளாரா என்றால் அவ்விதம் கேவியட் மனு எதுவும் நான் பெறவில்லை. வா.சா.ஆ.8 ஆவணம் சரியான ஆவணமா அல்லது தவறான ஆவணமா என்பதற்கு பதில் சொல்லுங்கள் என்று கேட்டால் எனக்கு சரியாக அது பற்றி தெரியவில்லை. 2013ம் ஆண்டு வாக்கில் பிரதிவாதி கட்டுமானம் கட்டும் போது நான் இடையுறு ஏற்படுத்தியதால் அவர் என் மீது இந்த நீதிமன்றத்தில் கேவியட் மனு வா.சா.ஆ.8 தாக்கல் செய்தார் என்றும், தற்போது வழக்கிற்காக 2015 ஆண்டு அக்டோபர் மாதத்தில் பிரதிவாதி கட்டிடம் கட்டியதாக பொய்யாக சொல்கிறேன் என்றும் அதன் காரணமாகத்தான் வா.சா.ஆ.8

ஆவணத்தை பற்றி என்னால் தற்போது முறையாக பதில் அளிக்க முடியவில்லை என்று சொன்னால் சரியல்ல. நான் காவல் நிலையத்திற்கு சென்று பிரதிவாதி மீது புகார் கொடுத்தேன் என்றும், மத்தியஸ்தர்கள் வைத்து பிரச்சினையை பேசினோம் என்றும் வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்று சொன்னால் சரியல்ல. எனக்கும், பிரதிவாதி வீடுகளுக்கும் மேற்கே உள்ள பொதுப்பாதையில் நான் ஆக்கிரமிப்பு செய்து விட்டு பிரதிவாதி என்னிடத்தில் ஆக்கிரமிப்பு செய்ததாக வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்ற சொன்னால் சரியல்ல. அதனால் நான் உண்மை நிலவரங்களை மறைத்து விட்டு பிரதிவாதியின் மீது வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றும், நான் கேட்கும் பரிகாரம் எனக்கு கிடைக்கத்தக்கதில்லை என்று சொன்னால் சரியல்ல. பிரதிவாதி கட்டுமானம் கட்டும் போது நான் வாளாதிருந்து (Latches and acquiscense) விட்டு தற்போது சட்ட காலத்திற்கும் மேலாக பிரதிவாதி கட்டிய கட்டுமானத்தின் படி அனுபவத்தில் வருவதை நான் பிரதிவாதி மீது கேட்கும் பரிகாரம் எனக்கு கிடைக்கத்தக்கதில்லை என்று சொன்னால் சரியல்ல. பிரதிவாதி வீடு கட்டிய காலத்தில் நான் சொத்து வாங்கவில்லை. நான் எப்போது சொத்து வாங்கினேன் என்று கேட்டால் நான் 2004ம் ஆண்டு வாக்கில் சொத்து வாங்கினேன். ஏற்கனவே எனக்கும், பிரதிவாதிக்கும் ஏற்பட்ட எழுத்து மூல உடன்படிக்கையை மறைத்து விட்டு அதன் படி நடக்காமல் தற்போது பிரதிவாதி மீது வீணாக வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றும் என்னுடைய பிராது தள்ளுபடி செய்யத்தக்கது என்று சொன்னால் சரியல்ல.

மறு விசாரணை – இல்லை.

முடித்த நேரம் - 12.35P.M